இவ்வளவுதான் நேரம் என்று சொல்லித்தான், உங்களைப் பேச அனுமதித்தேன்.

டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான விஷயம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லாமே முக்கியம்தான்; சீக்கிரம் பேசி முடியுங்கள்.

டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்: இது மிகவும் முக்கியம். 1947–ல் நாம் சுதந்திரம் பெற்றோம். இன்று 2007. 60 வருடங்கள் ஆகின்றன. ஆனால், 1957–லே முதன்முதலாக, சட்டமன்ற உறுப்பினராக இந்த மாமன்றத்திற்கு வந்தவர் யார் தெரியுமா? நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர். இந்த ஆண்டு அவருக்குப் பொன்விழா ஆண்டு. 50 வருடங்கள் ஆகிவிட்டன. 50 வருடங்களாக, சட்டமன்ற உறுப்பினராக இந்த மாமன்றத்தை அலங்கரித்து, மக்கள் பணியே மகேசன் பணி என்ற ஒரு உயரிய இலட்சியத்திலே இருக்கின்றார். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிற்குச் சுதந்திரம் கிடைத்த 60 வருடங்களில், 50 வருடங்கள்; உலகத்திலேயே யாருக்கும் கிடைக்காத மிகப் பெரிய பேறு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குக் கிடைத்திருக்கிறது. அதை அவர் மறந்திருக்கலாம். ஆனால், நாம் அனைவரும் அவருக்குப் பொன்விழா எடுக்க வேண்டும், எடுக்க வேண்டும் என்று கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர், உங்களுக்கு நன்றி. உட்காருங்கள்.

TRUTH ALONE TRIUMPHS

5. அரசினர் தீர்மானம்

ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதான விவாதத்தைத் தள்ளிவைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதி 13(2)–ன்கீழ் ஆளுநர் உரை மீதான விவாதத்தைத் தள்ளி வைத்து, 2007 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி

2007 ஜனவரி 23] [பேராசிரியர் க. அன்பழகன்]

(திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2007) இன்று ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்" என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

6. அரசினர் சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)

சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவு ஆய்வு செய்தல். 2007 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2007). மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/2007)[@] ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

[@]22-1-2007 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS